# ஹாலிவுட்டுக்குப் போகிறார் வித்யாசாகர்!

இளையராஜா, ஏ.ஆர். ரஹ்மான் வரிசையில் இப்போது இசையமைப்பாளர் வித்யாசாகரின் புகழும் கடல் கடந்துவிட்டது. மலையாள இயக்குனர் ராஜீவ் அஞ்சால் இயக்கும் 'பியாண்ட் தி சோல்' என்னும் ஹாலிவுட் படத்திற்கு இசையமைத்துள்ளார் வித்யாசாகர். இதற்காக ஹங்கேரி சென்றுவிட்டு சத்தமில்லாமல் சென்னை திரும்பியிருக்கிறார்.



'ஒருபக்கம் இளையராஜா இசையமைத்த 'ராக்கம்மா கையத் தட்டு' பி.பி.சி. டாப் டென்னில் முதலாவதாக வந்து கலக்குகிறது. மறுபக்கம் ஏ.ஆர்.ரஹ்மானின் 'பாம்பே ட்ரீம்ஸ்' லண்டன் ரசிகர்களைச் சுண்டி இழுக்கிறது. இதற்கு நடுவில் ஹாலிவுட்டில் நீங்களும் வெற்றிக்கொடி நாட்டியது சந்தோஷமாக இருக்கிறது' என்றதும் அடக்கமாகச் சிரித்தார்.

"எல்லாவற்றுக்கும் தமிழ் ரசிகர்களின் ஆசிதான் காரணம்" என்ற வித்யாசாகர், தன் ஹாலிவுட் அனுபவங்களைச் சொல்லத் தொடங்கினார்.

"சென்னை விமான நிலையத்தில் ஒருநாள் ராஜீவ் அஞ்சாலைச் சந்தித்தேன். தனது 'குரு' படத்தின் மூலம் இந்தியாவிலும், வெளிநாட்டிலும் புகழ்பெற்றிருந்த அவர், 'ஹாலிவுட்டில் நான் எடுக்கவுள்ள அடுத்த படத்திற்கு நீங்கள்தான் இசையமைக்க வேண்டும்' என்று கூறினார். அப்போது நான் அதை சீரியஸாக எடுத்துக்கொள்ளவில்லை. 'ஒரு மரியாதைக்காகத்தான் அவர் இப்படிக் கூறியுள்ளார். எத்தனையோ பிரபலமான இசையமைப்பாளர்கள் ஹாலிவுட்டில் இருக்க, நம்மைக் கூப்பிடமாட்டார்' என்றுதான் நினைத்தேன். ஆனால் இரண்டு மாதங்கள் கழித்து, அவரிடம் இருந்து எனக்கு அழைப்பு வந்தது. 'இன்னும் சில நாட்களில் ஹங்கேரிக்குப் போய் இசையமைக்க வேண்டும்' என்று கூறினார்.





'பூர்வஜென்மத்தின் பாவம்தான், இந்த ஜென்மத்தில் தீராத நோயாக உருவெடுக்கிறது' என்ற தத்துவத்தின் அடிப்படையில் 'பியாண்ட் தி சோல்' படத்தின் கதை நகர்வதையும் கூறினார்.

ராஜீவ் அஞ்சாலின் அழைப்பால் ஏற்பட்ட இன்ப அதிர்ச்சியில் இருந்து மீளவே இரண்டு நாட்கள் ஆனது. பிறகு, பதினைந்து

நாட்கள் இரவு- பகலாகச் சென்னையிலேயே அதற்கான இசைக் குறிப்புகளைத் தயார் செய்தேன். அந்த நேரத்தில் 'அன்பே சிவம்' படத்தின் ரிக்கார்டிங்கும் நடந்து கொண்டிருந்தது.

நான் ஆங்கிலப் படத்தில் இசையமைப்பதைக் கேள்விப்பட்டதும் கமல் மகிழ்ந்து போனார். ஏற்கெனவே 'ஹேராம்' படத்திற்காக ஹங்கேரி சென்றிருந்த கமல், அங்குள்ள இசைக் குழுக்களுடன் தொடர்புகொண்டு, எனக்கு வேண்டிய உதவிகளைச் செய்யச் சொன்னார்.

ரிக்கார்டிங்கிற்கு ஒரு வாரம் முன்னதாகவே நான் ஹங்கேரிக்குச் சென்றேன். எனக்கு ஹங்கேரி மொழி தெரியாததால், அந்த ஊரைச் சேர்ந்த லெஸ்லிகோவேச் என்பவரை உதவிக்காக வைத்துக்கொண்டேன். அந்த நாட்டின் இசைக்குறிப்புகளை ஆரம்பத்திலேயே படித்திருந்ததால், எனக்கு வேலை செய்வது சுலபமாக இருந்தது. தினமும் இருபது மணி நேரம் உழைத்து, ஒவ்வொரு கலைஞருக்கும் என் கைப்பட இசைக் குறிப்பை எழுதிக் கொடுத்தேன்.

ரிக்கார்டிங் தினத்தன்று, ரேடியோ சிம்பொனி ஆர்க்கெஸ்ட்ராவைச் சேர்ந்த 150 கலைஞர்கள், என் இசைக் குறிப்பைப் பார்த்து வாசிக்கத் தொடங்கியதும், என் கண்களில் ஆனந்தக் கண்ணீர் வழிந்தது. ஒரு நிமிடம் நான் சந்தோஷத்தின் உச்சிக்கே சென்றேன். இந்தப் படத்தில் சில இடங்களில் புல்லாங்குழல், வீணை, பஞ்சவாத்தியம், ஹார்மோனியம் போன்ற இந்திய இசைக் கருவிகளைப் பயன்படுத்தினேன். அந்தக் கருவிகள், அங்குள்ள கலைஞர்களை மிகவும் கவர்ந்தன.

ஜனவரி இரண்டாம் தேதி லாஸ் ஏஞ்சல்ஸில் ரிலீஸாகியுள்ள இந்தப் படத்தை, உலகில் நடக்கும் அனைத்துத் திரைப்பட விழாக்களுக்கும் அனுப்பப்போவதாக ராஜீவ் அஞ்சால் கூறினார். மேலும் பல ஆங்கிலப்பட வாய்ப்புகள் தனக்கு கிடைத்துள்ளதாகக் கூறிய அஞ்சால், அதற்கும் நான்தான் இசையமைக்க வேண்டும் என்றும் கூறியுள்ளார்" என்றார் வித்யாசாகர் மகிழ்ச்சியாக. மேஜர்தாசன்[Source: kumudam.com]